www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் திருப்புதல் தேர்வு - 2025

## பொதுத்தமிழ்

11 - ம் வகுப்பு

காலம் : 3 மணி மதிப்பெண் : 90

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறைகள் இருப்பின் அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும். 2. நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுத,அடிக்கோடிட பயன்படுத்த வேண்டும்.

### பகுதி – I

14 x1 = 14

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.2. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதவும்.

1. பாயிரம் இல்லது .............. அன்றே. அ. காவியம் ஆ. பனுவல் இ. பாடல் ஈ. கவிதை
2. 'புல்லின் இதழ்கள்' என்ற உலகப் புகழ்பெற்ற நூலை இயற்றியவர் .....
   அ. மல்லார்மே ஆ. வால்ட் விட்மன் இ. பாப்லோ நெருடா ஈ. ஷேக்ஸ்பியர்
3. தமிழ்நாட்டின் மாநில மரம் எது ? அ. தேக்கு ஆ. தென்னை இ. பலா ஈ. பனை
4. 'மணல் வாரி' என்பது ............ வகை. அ. நெல் ஆ. மாடு இ. உழவு கருவி ஈ. உரம்
5. ஐங்குறுநூற்றின் அடி வரையறை அ. 8-12அடிகள் ஆ. 13-31 அடிகள் இ. 4-8அடிகள் ஈ 3-6 அடிகள்
6. *பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.*

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளிவீதியார் | அ. | புறநானூறு |
| 2. | அண்ணாமலையார் | ஆ. | சி.சு.செல்லப்பா |
| 3. | வாடிவாசல் | இ. | குறுந்தொகை வாடிவாசல் |
| 4. | இளம்பெருவழுதி | ஈ | காவடிச்சிந்து |

   i) அஆஇஈ ii) ஆஈஅஇ iii) இஈஆஅ iv) இஈஅஆ
7. நன்று நன்று - இலக்கணக் குறிப்புத் தருக.
   அ. பண்புத்தொகை ஆ. அடுக்குத்தொடர் இ. வினைத்தொகை ஈ. இரட்டைக் கிழவி
8. "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" எனப் பாடியவர்.
   அ. பாரதிதாசன் ஆ. கவிமணி இ. பாரதியார் ஈ. ஔவையார்
9. கூற்று–1 தாகூர் பாரம்பரியத்தில் வேரூன்றிய மனிதர் ஆவார்.
   கூற்று-2 விஸ்வ பாரதி பல்கலைக் கழகத்தை நிறுவினார்.
   அ. 1 மட்டும் சரி ஆ. 2 மட்டும் சரி இ. இரண்டும் சரி ஈ 1சரி 2 தவறு
10. இந்தியக் கட்டடக்கலையின் வகைகள் ......... ஆகும். அ. 2 ஆ. 3 இ. 4 ஈ. 5
11. 'ஜனப்பிரளயம்' எனும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது ?
    அ. மக்கள் அலை ஆ. உயிர் அலை இ. மக்கள் வெள்ளம் ஈ. மக்கள் அவை
12. பிழையானத் தொடரைக் கண்டறிக.
    அ. பழங்குடியினர் ஓடும் நீரையே குடிநீராக பயன்படுத்தினர். ஆ. நீலகிரியில் வாழும் மக்கள் 'தோடர்' இனத்தவர் ஆவர். இ. குரும்பர் மொழியில் தாழ்வாரத்தை 'மெட்டு' என்ற சொல்லால் அழைப்பர். ஈ சேர மன்னர்களில் ஒருவன் 'மலையத் துவஜன்'.
13. 'கல்வி அழகே அழகு' என கூறும் நூல். அ. திருக்குறள் ஆ. திருமந்திரம் இ. நாலடியார் ஈ. நான்மணிக்கடிகை
14. ஜனவரி 14 யை 'தமிழர் பாரம்பரிய நாளாக' அறிவித்த நாடு எது ?
    அ. இந்தியா ஆ. சிங்கப்பூர் இ. மலேசியா ஈ. கனடா

### பகுதி - II (பிரிவு-1)

**குறிப்பு: எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 x 2 = 6

15. இனம்,மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. நல்ல குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?
17. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
18. " ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
    தீன் எனுஞ் செல்வமே பழுத்த சோணகர்" - *இப்பாடல் அடிகளில் ஒளிரக் காய்த்தது எது ? பழுத்தது எது ?*

### பிரிவு-2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 x 2 = 4

19. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்வி முறை குறித்துக் குறிப்பு வரைக.
20. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
21. குறிப்பு வரைக- குருகுலக் கல்விமுறை.

### பிரிவு-3

**குறிப்பு:எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக.** 7 x 2 = 14

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?
23. மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
24. **புணர்ச்சி விதி தருக.** சிறுகோல் (அ) இழுக்கின்றி
25. ***சொல்லை பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.*** அ. கால்நடை ஆ. வைகை
26. **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
    அ. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுதான். (மதி / கதிர்)
    ஆ. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும். (வலை / வளை)
27. ***பிறமொழிச் சொற்களைத் தமிழ் படுத்துக.*** அ. பாஸ்போர்ட் ஆ. தேசம் இ. சந்தோசம் ஈ. வாடகை



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

28. *மெய்ப்புத்திருத்தக் குறியீடுகளுக்கு பொருள் தருக.* அ. Dt ஆ. ?/ இ. !/ ஈ. #
29. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.* 1. குறை, குரை 2. வளி, வழி
30. *பகுபத உறுப்பிலக்கணம் தருக.* 1. வருகின்ற 2. மறுத்து

## பகுதி-III (பிரிவு-1)

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 x 4 = 8

31. "சலசவாவியில் செங்கயல் பாயும்"- இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. உணவும் உறக்கமும் அணில் கனவாம் : உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.
33. புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமைகளை திருக்குறள் வழி நின்று கூறுக.
34. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

## பிரிவு-2

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.** 2 x 4 = 8

35. "என்னுயிர் தமிழ் மொழி என்பேன்"- என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.
36. 'ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர்' என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
37. குறிப்பு எழுதுக. அ. அகநாழிகை ஆ. தொழு உரம்
38. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் குறித்து எழுதுக.

## பிரிவு-3

**குறிப்பு: எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.** 3 x4=12

39. "ஒழுகுநீர் நுணங்கறல் போலப் பொழுது மறுத்து உண்ணும்
சிறுமது கையளே...." என்ற நற்றிணை பாடலில் இடம் பெற்றுள்ள துறை எது? விளக்குக.
*(அல்லது)* பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.
40. "இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைக்கொல்லும் காழ்த்த இடத்து" -இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
*அல்லது* வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக
41. பகுதி,விகுதி, இடைநிலை ஆகியவற்றை பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| பேசு | -- | இன் | -- | ------ |
| எழுது | -- | கிறு | ஆன் | ------ |
| வணங்கு | -- | வ் | | ------ |
| | | ஆ. | | ------ |

42. *தொடர் மாற்றம் செய்க.*
அ. மூன்று நாட்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். *(கலவைத் தொடராக மாற்றுக)*
ஆ. தஞ்சைக் கோவில் எண் பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடத் தலைப் பாணியாகும். *(வினா தொடராக்குக)*
இ. என்னே...! அழகு...! தஞ்சைக் கோவிலின் சிற்பக்கலை *(செய்தி தொடராக மாற்றுக)*
ஈ. நான் வாரத்தின் இறுதி நாட்களில் நூலகத்திற்குச் செல்வேன். *(பொருள் மாறா எதிர்மறை தொடராக மாற்றுக)*
43. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்து எழுதி, ஏற்புடைய மூன்று நயங்களைச் சுட்டி எழுதுக.

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைவிக்கும்
நிறை உழைப்பு தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலை பிளந்து கனிகள் வெட்டிக்
கருவி எல்லாம் செய்து தந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்கு லத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச் செவரின் மூச்சு?

*- பாரதிதாசன்*

## பிரிவு-4

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.** 3x6=18

44. 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'- இக்கூற்றை திருக்குறள் வழி விளக்குக. *(அல்லது)* 'மதீனா நகரம் ஒரு வளமான நகரம்' என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
45. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே!' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரையை உருவாக்குக *(அல்லது)*
சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.
46. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை? *(அல்லது)*
நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக
47. *அடிபிறழாமல் எழுதுக.* 4+2=6
அ. 'உடை அணிந்தேன...... ......' எனத் தொடங்கும் அப்துல் ரகுமானின் தொலைந்து போனவர்கள் கவிதை
ஆ. .........பகை.என முடியும் திருக்குறள்.



Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com